கேற்றவாறு [illegible] மக்களும் எடுத்துக்கொண்ட முயற்சிகளால் ஒவ்வொரு கோவிலிலும் பூசையும் விழாக்களும் குறைவின்றி நடக்கத் தொடங்கின. கோவில்களின் வருவாய், செலவு இவற்றைக் கவனிக்கக் கோவில் ஆட்சி ஏற்பட்டது. கோவில் ஆட்சியாளர் 'ஆளுங் கணத்தார்' என்றும், 'அமிர்த கணத்தார்' என்றும் பெயர் பெற்றனர். பெருங் கோவில்களில் ஆடல்மகளிர் இருந்து பணி செய்தனர். கோவில் பணிகளைக் குறைவறச் செய்யப் பணி மக்கள் பலர் இருந்தனர்.

சில கோவில்களை அடுத்து மடங்கள் இருந்தன. மடங்கள் துறவிகளின் ஆட்சியில் இருந்தன. அவர்கள் மக்களுக்குச் சமய போதனையையும் மருத்துவ வசதியையும் அளித்து வந்தனர்; விழாக் காலங்களில் உணவு வழங்கினர். கோவில்களில் இராமாயணம், பாரதம் போன்ற நூல்கள் படித்துப் பொது மக்களுக்கு விளக்கப் பெற்றன. கோவிலில் வேலை செய்த ஒவ்வொருவருக்கும் நிலம் மானியமாக வழங்கப்பட்டிருந்தது.

# 11. சோழர் வரலாறு

## 1. சோழர் வரலாற்றுக்குரிய மூலங்கள்

சோழர் ஆட்சி ஏறத்தாழக் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் தொடங்கி பதிமூன்றாம் நூற்றாண்டோடு முடிவடைகிறது. இந்த 400 வருட காலம் தமிழகம் முழுவதி லுள்ள கோயில்களில் சோழர் காலக் கல்வெட்டுகள் பல்லாயிரக்கணக்கில் காணப்படுகின்றன. சோழர்கள் நாடாண்ட பொழுது, பம்பாய் மாநிலத்தைப் பிற்காலச் சாளுக்கியர்களும் இராட்டிர கூடர்களும் ஆண்டனர். அவர்கள் சோழரோடு ஓயாது போரிட்டு வந்தனர். கோதாவரி, கிருஷ்ணை ஆறுகளுக்கு இடைப்பட்ட வேங்கி நாட்டைச் சாளுக்கியர் ஆண்டு வந்தனர். சோழர்கள் அவர்களுடன் உறவுகொண்டு மேலைச்சாளுக்கியரைத் தாக்கி வந்தனர். இவர்களுடைய கல்வெட்டுகள் சோழர் வரலாற்றை அறியப் பெருந்துணை செய்கின்றன.

## 2. பிற்காலச் சோழர்கள்

### (சோழர் பட்டியல்)

- 1. **ஆதித்த சோழன்** (கி.பி. 880 - 907)
  - முதற் பராந்தகன் (கி.பி. 907 - 953)
    - இராசாதித்தன்
    - கண்டராதித்தன் (கி.பி. 953 - 56)
      - உத்தமசோழன் (மதுராந்தகன்) (கி.பி. 969 - 985)
    - அரிஞ்சயன் (கி.பி. 956 - 957)
      - இரண்டாம் பராந்தகன் (சுந்தர சோழன்) கி.பி. 956 - 973
        - ஆதித்த கரிகாலன் (கி.பி. 956 - 961)
        - முதலாம் இராசராசன் (கி.பி. 985 - 1014)
          - முதலாம் இராசேந்தின் (கி.பி.1012 - 1044)
            - இராசாதிராசன் (கி.பி. 1018 - 1054)
            - இரண்டாம் இராசேந்திரன் (ராசேந்திர சோழதேவன்) (கி.பி. 1054 - 1064)
              - இராசமகேந்திரன்
            - வீர ராசேந்திரன் (கி.பி. 1063 - 1069)
              - அதிராசேந்திரன்

முதற்குலோத்துங்கன் காலத்தில் சூரியனுக்குத் தனிக்கோவில் ஏற்பட்டது. அது சூரியனார் கோவில் எனப்படும். கங்கைக் கரை ஊர்களிலிருந்த சைவசமய ஆச்சாரியர்கள் சோழர்களுக்குக் குருமாராக இருந்து வந்தனர். இராசேந்திரன் படை கங்கை வரையில் சென்ற பொழுது, பல அரசரை வென்று வந்தது. சோழர் காலத்தில் இலங்கை பல முறை தாக்கப்பட்டது. ஏறத்தாழ நூற்றைம்பது ஆண்டுகள் இலங்கையின் வடபகுதி சோழர் ஆட்சியில் இருந்தது. சோழர் காலக் கட்டடக்கலை இலங்கையில் பரவியது.

மேற் கூறப்பெற்ற வெளிநாடுகளில் வணிகராகச் சென்ற தமிழர் தங்கள் கட்டடக்கலை, வழிபாட்டு உருவங்கள் முதலியவற்றைக் கிழக்கிந்தியத் தீவுகளிலும் பர்மா, மலேயா, சையாம், இந்தோ-சீனம் முதலிய நாடுகளிலும் பரப்பினர் என்பது இன்று அங்குக் காணக்கிடக்கும் கோவில்களைக் கொண்டும் விக்கிரகங்களைக் கொண்டும் தெளியலாம்.

## 12. பாண்டியர் வரலாறு

[K.A.N. சாஸ்திரியின் பாண்டிய அரசு, T.V.S. பண்டாரத்தாரின் பாண்டியர் வரலாறு இவற்றின் துணையைக் கொண்டு இப்பகுதி எழுதப் பெற்றது.]

**சங்ககாலப் பாண்டியர்:** சங்கத்தின் இறுதிக் காலம் ஏறத்தாழக் கி.பி. 300 என்று சொல்லலாம். ஆனால் அதன் தொடக்க காலம் எது என்று கூறக்கூடவில்லை. கி.பி. 300- க்கு உட்பட்டவை

பேரரசின் தென் மாநில ஆளுநராய் இருந்தனர். அவர்கள் அப்பேரரசின் வீழ்ச்சிக் காலத்தில் தொண்டை மண்டலத்தைக் கைப்பற்றினர். அம்முயற்சியில் பல்லவரால் தாக்குண்ட களப்பிரர் என்ற கூட்டத்தார் தெற்கு நோக்கிச் சென்று சோழ பாண்டிய அரசுகளை நிலைகலங்கச் செய்தனர். சுமார் கி.பி. 575 வரையில் பாண்டிய நாட்டில் களப்பிரர் ஆட்சி இருந்தது என்று கூறலாம். கி.பி. 575-இல் கடுங்கோன் என்ற பாண்டியன் களப்பிரர் ஆதிக்கத்தை ஒழித்து மீண்டும் பாண்டியர் ஆட்சியை மதுரையில் நிலை நிறுத்தினான். அக்கால முதல் சோழப் பேரரசு தலைதூக்கிய கி.பி. 875வரையில் பாண்டியர்கள் தம் ஆட்சிபெற்று விளங்கினர்.

இக்காலப் பாண்டியர்:

1. பாண்டியர் கடுங்கோன்
2. மாறவர்மன் அவனிசூளாமணி
3. செழியன் சேந்தன்
4. மாறவர்மன் அரிகேசரி
5. கோச்சடையன் ரணதீரன்
6. அரிகேசரி பராங்குச மாறவர்மன்
7. நெடுஞ்சடையன் பராந்தகன்
8. இராசசிம்ம பாண்டியன்
9. முதலாம் வரகுணன்
10. சீமாறன் சீவல்லபன்
11. இரண்டாம் வரகுணன்
12. பராந்தக பாண்டியன்

இவருள் **மாறவர்மன் அரிகேசரி** (கி.பி. 640- 670) குறிப்பிடத்தக்கவன். இவன் மங்கையர்க்கரசியாரின் கணவன்; முதலில் சமணனாயிருந்து பின்பு திருஞான சம்பந்தரால் சைவனாக மாறியவன். இவன், சேரர், பரவர் என்ற குறுநில மன்னர் சிலரை வென்றவன். 'நெல்வேலி வென்ற நெடுமாறன்' இவனே. இவன் ஆட்சியின் தொடக்கத்தில் யுவான் சுவாங் என்ற சீனயாத்திரிகன் பாண்டிய நாட்டை நேரில் கண்டான்; அந்நாட்டின் முத்து உற்பத்தியைப் பற்றி எழுதியுள்ளான். அந்நாடு வாணிகத்தால் வளம் பெற்றுச் செல்வத்தால் சிறந்திருந்தது என்று குறித் துள்ளான். இப்பாண்டியன் இரணிய கர்ப்பதானமும் துலாபார தானமும் செய்தவன் என்று வேள்விக்குடிச் செப்பேடுகள் கூறுகின்றன.

கிராமங்க... கன்னட... மாவட்டங்க... தெலுங்கரும் ...ரும்
முழுவதும் கன்னடரே ... திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் ... தெலுங்கரும் ...
திருநெல்வேலி ஆகிய மாவட்டங்... ஆயினும், தெலுங்கரும் ...
மிகுதியாகக் காணலாம். ஆயினும், சிறந்து விளங்குகின்றமை
தமிழரோடு ஒன்றுபட்டுப் பழகுவதில் சிறந்து விளங்குகின்றமை
பாராட்டற்பாலது.

## (7) மகாராட்டிரர்

நாயக்க மன்னர் தஞ்சை நாட்டை கி.பி. 1532 முதல் 1675 வரையில் அரசாண்டனர். மகாராட்டிரர் அதே நாட்டை கி.பி. 1675 முதல் 1799 வரையில் ஆண்டு வந்தனர். பின்பு தஞ்சை நாடு ஆங்கிலேயர் ஆட்சிக்கு உட்பட்டது.

அவுரங்கசீப் டெல்லியை ஆண்டபொழுது மகாராட்டிரத்தில் சிவாஜி மன்னராக இருந்தார். அவர் டெல்லி சக்கரவர்த்தியையும் பாமினி சுல்தான்களையும் சமயோசிதமாகத் தாக்கி வந்தார். அவர் காலத்தில் தஞ்சை நாயக்கர் வலியிழந்திருந்தனர். அதனால் தஞ்சை கி.பி. 1675-இல் மகாராட்டிரர் வசப்பட்டது. (Nayaks of Tanjore, p. 165) இவ்வாறே டெல்லி சக்கரவர்த்தியின் துணையால் செஞ்சியில் கி.பி. 1700 இல் சிங்குகளின் ஆட்சி ஏற்பட்டது. (Gingee and its Rulers, P.351)

மகாராட்டிரர் இந்து சமயத்தினர்; கலை விரும்பிகள். ஆதலால் இந்து சமயக் கோவில்கள் சிறப்புற்றன. கருநாடக இசை வளர்ச்சி பெற்றது. தெலுங்கு, கன்னடம், தமிழ் மகாராட்டிரம் என்னும் மொழிகள் ஓரளவு வளர்ச்சி பெற்றன.

**இராஜா சரபோஜி** என்பவர் சிறந்த அறிஞர். அவரது சிலை தஞ்சை அரண்மனையில் இன்றும் இருக்கிறது. அவர் பெரு முயற்சி எடுத்துக்கொண்டு தம் காலத்தில் இருந்த பனை ஓலைச் சுவடிகளைத் திரட்டினார். அவை இலக்கியச் சுவடிகள், இலக்கணச் சுவடிகள், மருத்துவச் சுவடிகள், சோதிடச் சுவடிகள் எனப் பல திறப்படும். அவை தஞ்சை - சரசுவதி மகாலில் வைக்கப் பட்டுள்ளன. அவர் தமிழ்ப் புலவர்களை நன்கு ஆதரித்தார். கொட்டையூர்ச் சிவக் கொழுந்து தேசிகர் என்பவர் அவர்மீது குறவஞ்சி நாடகம் ஒன்றைப் பாடியுள்ளார். சரபேந்திர பூபால குறவஞ்சி நாடகம் என்பது அதன் பெயர். அந்நூல் அவரது அரிய பண்புகளை அழகுறத் தெரிவிப்பது. (அம்மன்னர் பெயரால் தஞ்சையில் ஒரு கல்லூரி நடைபெற்...